முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 07.08.2025

O.S.90/2018

வா.சா. 2. ஜெபின் ஜினோ

2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

நான் எம்பிஏ படித்துள்ளேன். நான் சென்னையில் ரியல் எஸ்டேட் கம்பெனியில் விற்பனை மேலாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கின் விபரங்கள் யார் சொல்லி தெரியும் என்றால் எனக்கு நேரடியாக மற்றும் சில விபரம் எனது பாட்டி சொல்லி தெரியும். 1ம்பிரதிவாதி ராணுவத்தில் வேலைப்பார்த்து ஓய்வு ஊதியம் பெற்று வருகிறார் என்றால் சரி. ராணுவத்தில் ஓய்வு பெற்ற நபர்களுக்கு பென்சன் ரெகுலேசன் for the army part 1, 1961 படி ஓய்வூதியம் பெறுகிறார் என்றால் சரி.

2) ஓய்வூதியம் பெறும் நபர் வருடத்திற்கு ஒருமுறை சென்று சான்று அளிக்கவேண்டும் என்றால் அவரின் ஓய்வூதியத்தை நான் அனுபவிக்க வில்லை அதனால் அதைப்பற்றி எனக்குதெரியாது. ராணுவ கேன்டீன்லிருந்து பெறும் பலன்கள் பற்றி எனக்கு தெரியாது. 2018 ல் தான் நான் மிலிட்டரி ஐடி கார்டு மற்றும் ATM card, military card ஆகியவற்றை நான் தான் வாங்கிகொடுத்தேன்.

3) 2018 ல் ஒருசமயம் அவரது குடும்பத்தினர் அடித்து அவரை எங்கள் வீட்டில் போட்டுவிட்டார்கள். நான் எனது அப்பாவை கோவை கேர் சென்டரில் வைத்து 3 மாதங்கள் மன நல சிகிச்சை கொடுத்தேன். மருந்துகளை உட்கொண்டதால் அவர் சிறிது குணம் ஆகிஇருந்தார். அதனால் அவருக்கு கார்டுகளை எடுத்துக்கொடுத்தேன். அதன்பிறகு அவர் பழையப்படி பிரச்சனை ஆரம்பித்தார் நான் சென்னையில் வேலையில் இருப்பாதால் அவரை என்னால் பார்க்கமுடியாது என்பதால் அவரை அவரது வீட்டில் கொண்டு சேர்த்துவிட்டேன்.

4) **நான் எனது அப்பாவுடன் எப்போதாவது சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால்**

( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)